[1975 ஏப்ரல் 18

புலவர் சி. பழனிச்சாமி: பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு அடிப்படையாக இருந்த தந்தை பெரியார் அவர்கள் பெயராலே அனாதை இல்லங்களைத் தொடங்குவதற்கு யாராவது முன்வந்தால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவெல்லாம் இந்தக் கேள்வியிலே வராது. பெரியார் நினைவு வளைவுக்கு அனுமதிகொடுக்கப்டிருக்கிறதா என்பது பற்றித்தான் கேள்வி.

திரு. எம். சுரேந்திரன்: சேலத்திற்கு அருகாமையிலே பெரியார் நினைவு வளைவு அமைப்பதற்கு அனுமதி வழங்கியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அனுமதியை யார் பெற்றார்கள்? எந்த அமைப்பின் பெயரால் ஏற்படுத்தப்படுகிறது? எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சேலம் நகர திராவிடர் கழகத் தலைவர் அனுமதிகோரியிருந்தார், அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பிறகு சில நிபந்தனைகளோடு அமைக்கவேண்டுமென்ற காரணத்தினாலே தாமதமாகக் துவக்கினார்கள். இப்போது வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கிராமக் கணக்குகள்

* 715. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமக் கணக்குகளைக் கவனிக்க இயந்திர முறையை அரசு அமலுக்குக் கொண்டுவந்துள்ளதா?

(இ) இப்பணி தற்பொழுது 25 வட்டங்களில் அமல் நடத்தப்படுகின்றது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) ஆமெனில், இப்பணி எத்தனை இடங்களில் அமல் நடத்தப்படுகின்றது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தப் பணி தஞ்சை மாவட்டத்திலே எந்த எந்த இடங்களில் அமலாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூர், ஒரத்தநாடு, கும்பகோணம், பாபநாசம், மன்னுர்குடி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டணம், நன்னிலம், மாயூரம், சீர்காழி, பட்டுக்கோட்டை இப்போது பேராவூரணி ஆகிய 12 இடங்களில் நடைபெற்று வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: இந்தக் கணக்குகளேக் கவனிப்பதற்கு இயந்திர முறைகள் இந்த மாநிலத்தில் கையாள்வது இல்லே என்று ஒரு சந்தர்ப்பத்திலே இந்தச் சபையிலே சொல்லப்பட்டது. இப்போது பல இடங்களிலே இந்த முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் சொன்ஞர். இதன் மூலமாக வேலேயில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகும், வேலேவாய்ப்புக் குறையும் என்பதை அரசு அறியுமா? ஆகவே, அங்கே உள்ளவர்களுக்கு எல்லாம் வேலே வாய்ப்பைக் கொடுத்தபிறகு இப்படிப்பட்ட முயற்சியை எடுத்துக் கொள்ளலாமல்லவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது 25 வட்டங்களில் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யாரும் வேலேவாய்ப்பு இல்லே என்ற முறையில் பாதிக்கப்படவில்லே. அப்படி யாரும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வேண்டிய மாற்று வேலேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மறையூர் சாலே

* 716. விஞ—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மறையூர் கிராமத்தின் சாலேயைச் சீர் செய்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி: அரசின் பரிசீலனே யில் இல்லே.

திரு. என். கிட்டப்பா: தலேவர் அவர்களே, மாயூரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மறையூர் கிராமத்தின் சாலேயைப் போட்டுக்கொண்டிருக்கிருர்கள். அது சதுப்பு நிலமாக இருப்பதால் சாலே கப்பி போட்டு போட்டால்தான் நல்ல முறையிலே அமையும். அங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருந்தபோதுகூட அவர்